சுருக்கம்

விழாக்கள் – தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்த தலைவர் இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் பிறந்த தினமான ஜுலை 7–ம் நாளை அரசு விழாவாக கொண்டாட அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (பொருட்காட்சி மற்றும் விழா)த்துறை

அரசாணை (நிலை) எண் : 148 நாள் : 06.07.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042
ஆனி 21ம் நாள்
படிக்கப்பட்டது

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலக குறிப்பு
நாள் : 30.06.2011.

ஆணை : -

மேலே படிக்கப்பட்ட குறிப்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்த தலைவர் இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் பிறந்த தினமான ஜுலை 7–ம் நாளை அரசு விழாவாக கொண்டாட வேண்டுமென ஆணையிட்டுள்ளார்கள்.

2. தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவர் இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம் கோழியாளம் என்ற கிராமத்தில் 1859–ம் ஆண்டு ஜுலை திங்கள் 7–ம் நாள் பிறந்தார். இவர் பள்ளிப் பருவத்திலிருந்தே தீண்டாமை கொடுமைக்கு ஆளானார். இவர் தன்னுடையச் சொந்த ஊரிலும் தஞ்சாவூரிலும் பள்ளிப் படிப்பை முடித்து கோயம்புத்தூரில் கல்லூரிப் படிப்பை முடித்தார்.

3. இனப் போராளியாகவும் வழக்கறிஞராகவும் பத்திரிக்கையாளராகவும் தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கினார். தன் இன மக்கள் அனுபவிக்கும் வேதனைகளிலிருந்து அவர்களை விடுவிக்க பாடுபடுவதை தன்னுடைய வாழ்நாள் இலட்சியம் எனத் தீர்மானித்துத் தொண்டாற்றினார். இவர் 1891–ம் ஆண்டு ''பறையர் மகாஜன சபை'' என்ற ஓர் அமைப்பைத் தோற்றுவித்தார். பின்னர் இந்த அமைப்பு ''ஆதிதிராவிட மகாஜன சபை'' என்று அழைக்கப்பட்டது. இச்சபை மூலம் ஆதிதிராவிட மக்கள் சமுதாய முன்னேற்றம் அடைய பாடுபட்டார். பின்னர் 1893–ம் ஆண்டு ''பறையர்'' என்ற பத்திரிக்கையைத் தொடங்கினார். இந்தப் பத்திரிகை தாழ்த்தப்பட்ட மக்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்றது. தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்காக

இப்பத்திரிகையில் தொடர்ந்து எழுச்சியூட்டக் கூடிய கட்டுரைகளை எழுதினார். 1923ம் ஆண்டில் சென்னை மாநிலத்தின் மேல் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

4. 1926–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1–ஆம் தேதி ராவ்சாகிப் பட்டம் அளிக்கப்பட்டது. 1930 ஜீன் மாதம் 6ஆம் தேதி திவான்பகதுார் பட்டமும் திராவிடமணி என்ற பட்டமும் அளிக்கப்பட்டன. அண்ணல் காந்தியடிகள் மோ.க.காந்தி என்று தமிழில் கையெழுத்து போடுவதற்குக் காரணமாக இருந்தவர் இரட்டை மலை சீனிவாசன் தான். இரட்டை மலை சீனிவாசன் தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் வழக்கறிஞராக இருந்தபோது நீதி மன்றத்தில் மொழி பெயர்ப்பாளராக பணியாற்றினார்.

5. இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் 1930–ம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் தாழ்த்தப்பட்டோர் சார்பில் தலைவர் அண்ணல் அம்பேத்கர் அவர்களுடன் கலந்து கொண்டார். அண்ணல் காந்தியடிகளால் தொடங்கப்பட்ட தீண்டத்தகாதோர் சமுதாய ஊழியர் சங்கத்தில் (Servants of Untouchables Society) உறுப்பினராக இருந்தார். மேலும் 1939ம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் அவர்களுடன் சென்னை மாகாண தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்பைத் தொடங்கினார். தன்னுடைய வாழ்க்கையைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அர்ப்பணித்த இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் 18.09.1945 அன்று தன்னுடைய 85–வது வயதில் இம்மண்ணுலகைவிட்டு பிரிந்தார்.

6. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கு செயல் வடிவம் தரும் வகையில், தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்த தலைவர் இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் தியாக வாழ்வையும் மாண்பினையும் நாட்டு மக்கள் ஆண்டு தோறும் நினைவு கூரத்தக்க வகையில், அவர்களின் பிறந்த தினமான ஜுலை 7–ம் நாளை அரசு விழாவாக கொண்டாட அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

து.நா.இராமநாதன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –9.
மாவட்ட ஆட்சித்தலைவர், சென்னை மாவட்டம்.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை –9.
துணை இயக்குநர் (நினைவகங்கள்) தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை –9.
மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், சென்னை மாவட்டம்.
நகல்
நிதி(தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி)த்துறை, சென்னை –9.
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (கணக்குப் பிரிவு/ வரவு செலவு) சென்னை –9
இ.கோ./ உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஒம்/–
பிரிவு அலுவலர்.